මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
MINISTRY OF FINANCE AND MASS MEDIA

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය - මුදල් / அலுவலகம் - நிதி / Office - Finance: (+94)-11-2484500, (+94)-11-2484600, (+94)-11-2484700
ෆැක්ස් - මුදල් / பெக்ஸ் - நிதி / Fax - Finance: (+94)-11-2449823
කාර්යාලය - ජනමාධ්‍ය / அலுவலகம் - வெகுசன ஊடக / Office - Mass Media: (+94)-11-2513459, (+94)-11-2513498, (+94)-11-2512324
ෆැක්ස් - ජනමාධ්‍ය / பெக்ஸ் - வெகுசன ஊடக / Fax - Mass Media: (+94)-11-2513458
වෙබ් අඩවි / வெப் சைட்கள் / Websites: www.treasury.gov.lk, www.media.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/4/1/9 -2018
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2017.12.27

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 03/2017**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**2018 வரவு செலவுத்திட்டம் - செலவினத்திற்கான அங்கீகாரம் வழங்குதல்**

**01. செலவினத்தினை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்**

2017.12.09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக 2018 ஆம் ஆண்டின் போது செலவினத்தினை மேற்கொள்வதற்கு அரசியலமைப்பின் 150(1) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக கௌரவ நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஆணைப்பத்திரங்களில் கையொப்பமிட்டுள்ளார்.

இதற்கமைவாக, அதிகாரமானது கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) பொதுவான சேவைகள் தொடர்பாக - 2018 இன் 1 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம்.
(ஆ) விசேட சட்ட விடயங்கள் தொடர்பாக - 2018 இன் 1 ஆம் இலக்க விசேட சட்ட அதிகாரம்.
(இ) முற்பணக்கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக - 2018 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம்.

**02. வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துதல்**

அரசாங்கத்தின் முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2018 வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும் குறித்த வருடத்துடன் தொடர்பான பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அடைந்து கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுதல் மற்றும் பெறுகைகளைத் திட்டமிடுமாறு அனைத்து செலவின முகவர்களிடமும் கோரப்பட்டுள்ளது. 2018 இற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தொடர்புடைய வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கு துரித நடவடிக்கையினை எடுப்பதற்கு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனைத்து மூலதன கருத்திட்டங்கள் உள்ளடங்களாக வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின்

செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கீழ் தனியான பிரிவொன்று ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான இலக்கினை அடைந்துகொள்வதற்கு இப்பிரிவுடன் நெருக்கமான தொடர்பினை பேணுதல் வேண்டும். மேலதிக வழிகாட்டல்களை வேறாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**03. காலாண்டு அடிப்படையில் செலவின வரையறை**

2018 ஆம் ஆண்டுடன் தொடர்பான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவின வரையறை காலாண்டின் அடிப்படையில் மேலும் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திறைசேரியின் மூலம் பணம் ஒதுக்கீடு செய்யப்படும் போது காலாண்டு வரையறை அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த வரையறைக்குள் செயற்பாட்டு திட்டமிடல் மற்றும் பொருட் கொள்வனவு திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அனைத்து பிரதான கணக்காளர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாட்டின் மூலம் செலவின முகவராண்மை தொடர்பாக நிதி ஒதுக்கீடு செய்கின்ற வினைத்திறனான தொழிற்பாடு எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக ஆலோசனைகள் அரசாங்க கணக்கு சுற்றறிக்கை இல. 263/2017 இல் தரப்பட்டுள்ளது.

**04. அர்ப்பணிப்பு முகாமைத்துவம்**

நிதிப் பிரமாணக்குறிப்பின் அடிப்படையில் அனைத்து செலவினங்கள் தொடர்பாக அர்ப்பணிப்பினை ஏற்படுத்துவதற்கு முன்னர் அது தொடர்பான தேவையான நிதி ஒதுக்கீடுகள் காணப்படுவதினை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், ஒதுக்கீடல்லாது ஏற்படுத்தப்படும் அர்ப்பணிப்பு தொடர்பாக பொதுத் திறைசேரியின் பொறுப்புக்களுக்கு உட்பட்டதாக காணப்படாதவிடத்து புதிய அலுவலர்கள் மூலம் அது தொடர்பாக தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூறவேண்டியதாக இருக்கும். அதேபோன்று புதிய பொறுப்புக்களுக்கு செல்வதற்கு முன்னர் காணப்படும் பொறுப்புக்கள் மற்றும் அர்ப்பணிப்புக்களை தீர்ப்பதற்கு தற்பொழுது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல் வேண்டும். இதன் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டுக்கான தீர்க்கப்படாத அர்ப்பணிப்புகள் 2018 இன் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி தீர்க்கப்படுதல் வேண்டும். இதற்கமைவாக அர்ப்பணிப்பு முகாமைத்துவம் தொடர்பான 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**05. முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்**

முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் முகாமை செய்யப்படுதல் வேண்டும். இந்த வரையறைக்குள் வழங்கப்பட்ட முற்பணக் கடன்களை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் XXIV ஆம் பந்திக்கு அமைவாக தவணைக் கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்வது அவசியமாகும்.

**06. தெளிவுபடுத்தல்கள்**

இந்த சுற்றுநிருபத்தின் உள்ளடக்கம் தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி அனோமா நந்தனியினை தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (தொடர்பு இல. 011-2484681)

**ஒப்பம்/ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவையின் செயலாளர்
iv. கணக்காய்வாளர் நாயகம்